ந.க. எண். நு.பா2/ 12761 /2024
நாள் : 09 .09.2024

இயக்குநர் அலுவலகம்,
உணவுப் பொருள் வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
சென்னை–5

ஆய்வுக் கூட்ட நடவடிக்கைகள்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இயக்குநர் அவர்களின் தலைமையில் 05.09.2024 அன்று முற்பகல் 11.00 மணியளவில் **"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை தொடர்புடைய நுகர்வோர் பிரச்சனைகள்"** என்ற தலைப்பின்கீழ் தன்னார்வ நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளுடனான இரண்டாம் காலாண்டு கூட்டம் நடைபெற்றது. காலாண்டு கூட்டத்தில் கலந்துகொண்ட அலுவலர்களின் விவரம் பின்வருமாறு:

1. இணை இயக்குநர் (பொது), ஆதி திராவிடர் நலத்துறை
2. இணை இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை
3. இணை ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
4. உதவி ஆணையாளர்–1, உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
5. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் உறுப்பினர்கள்

ஆய்வுக் கூட்டத்தில் சில தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளால் எழுப்பப்பட்ட விவாதப்பொருட்கள் தொடர்பாக பின்வரும் கருத்துகள் பகிரப்பட்டன

- சேலம் மாவட்டம், மல்லியகரை மகளிர் நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் சார்பில், மழைக்காலங்களில் குடியிருப்பு பகுதிகளிலும் சமுதாயக்கூடங்களிலும் மழைநீர் தேக்கமடைவதாகவும் அதனை சீர் செய்து தர வேண்டி கோரப்பட்ட கோரிக்கையினை அயோத்திதாசர் பண்டிதர் திட்டத்தின் மூலம் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என பழங்குடியினர் நலத்துறை இணை இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

- சென்னை மாவட்டம், அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை பைபாஸ் NH45 பாலத்தின் கீழுள்ள நரிக்குறவர் சமுதாய மக்கள் வசிக்கும் பகுதிகளை ஆய்வு செய்து அவர்களின் வாழ்வாதார தேவையை பூர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இயக்குநர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இந்திய நுகர்வோர் விழிப்புணர்வு கூட்டமைப்பு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு அது தொடர்பான புகைப்பட ஆதாரங்களுடன் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பிக்கும் பட்சத்தில் விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

- சென்னையிலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பள்ளிகள் மற்றும் விடுதிகளில் மாணவர்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்பட்டு வருவது குறித்து ஆய்வு செய்து வருவதாக ஆதி திராவிடர் நலத்துறை இணை இயக்குநர் (பொது) அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- ஆதி திராவிடர் மற்றம் பழங்குடியின சமூகத்தைச் சார்ந்த வழக்கறிஞர்களுக்கு நிறுத்தப்பட்ட உதவித்தொகையினை (stipend) மீண்டும் வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆதி திராவிடர் நலத்துறை இணை இயக்குநர் (பொது) அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் வட்டம், கீழ்ப்பாக்கம் ஊராட்சியில் வசிக்கும் மக்களின் சுகாதாரத்தினை பேணி காத்திட வேண்டியும், வாழ்வாதாரத்தை மேம்படுத்திடவும், தனிமனித கழிப்பிடம், சுத்தமான குடிநீர், சாலை வசதி அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ள இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அறிவுறுத்தப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. மேலும், இப்பகுதியில் வாழும் இருளர் சமூக மக்களுக்கு வழங்கப்பட்ட நிலங்களுக்கு விரைவில் பட்டா வழங்கி மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள் கிடைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- தாட்கோ திட்டங்கள் எளிய மக்களுக்கும் சென்றடையும் வகைளில் தாட்கோ திட்டங்களை தமிழில் அச்சிட்டு வெளியிடவும் மற்றும் இணையவழியில் விண்ணப்பிக்க ஏதுவாக தாட்கோ அலுவலகங்களின் முன்பாக இ-சேவை மையங்கள் அமைக்க அனுமதி வழங்க வேண்டி சேலம் மாவட்ட ஆட்சியருக்கு அறிவுறுத்தப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- தாட்கோ திட்டத்தின் கீழ் பயன்பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வங்கிக்கடன் பெறுவதில் காலதாமதம் ஏற்படுவதைத் தடுக்க அதன்மீது மேல்நடவடிக்கை எடுக்கப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- மாநில நுகர்வோர் பாதுகாப்பு குழு / மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு குழு கூட்டம் நடத்துவதற்கு, குழுவின் உறுப்பினர்கள் நியமனம் குறித்து அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, அரசாணை பெற்றவுடன் கூட்டம் நடத்தப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- அரசாணை எண். 389, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை, நாள்: 28.12.1988-ன் படி மாவட்ட ஆட்சியரின் தலைமையில் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள், நுகர்வோர் சார்ந்த துறைகளுடன்

இணைந்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காலாண்டு கூட்டம் நடத்திட வேண்டுமென அனைத்து மாவட்ட ஆட்சியருக்கும் நேர்முகக் கடிதம் மூலம் தெரிவிக்கப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

- தேசிய உணவு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் விழிப்புணர்வு கண்காணிப்புக் குழு நடத்த வேண்டிய மாவட்டங்களுக்கும் உடன் நடத்தக்கோரி அறிவுரைகள் வழங்கப்படுமென இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.
- நுகர்வோர் நலன் கருதி, நுகர்வோர் பாதுகாப்பு / விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகளை பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் செயல்படும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்கள், தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடன் இணைந்து செயலாற்றிட வேண்டுமென மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர்களுக்கு தெரிவிக்கப்படுமென இயக்குநர் அவர்களால் அறிவுரைகள் வழங்கப்பட்டது.
- 2022-2023 ஆண்டிற்கான மாநில நுகர்வோர் பாதுகாப்பு விருதிற்கு வெற்றியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு விருதுகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது மற்றும் 2023-2024 ஆண்டிற்கான மாநில நுகர்வோர் பாதுகாப்பு விருதிற்கான முன்மொழிவுகள் பெறப்பட்டு, வெற்றியாளர்களை தேர்வு செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என இயக்குநர் அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

ஒம்/-த.மோகன்
இயக்குநர்

பெறுநர்

1. அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
2. கூட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள்.
3. கூட்டத்தில் கலந்து கொண்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளின் பிரதிநிதிகள்.

நகல்

1. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,
   கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை,
   தலைமைச் செயலகம், சென்னை-9.
2. 'உ' பிரிவு, கண்காணிப்பாளர்.
3. நுபா-2 இருப்பு கோப்பு

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

இயக்குநருக்காக